**வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு கம்பனி - 2023/2024**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட தேசிய உப்பு கம்பனியின் (“கம்பனி”) 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SMEs இற்கான SLFRS) இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களிற்கு (SMEs இற்கான SLFRS) இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கை | 2024/25 நிதி ஆண்டின் இருப்புக்களை மதிப்பீடு செய்யும் போது கிரயம் | நியமத்தின் பிரகாரம் இருப்பு மதிப்பீடு செய்யப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கீட்டு நியமத்தின் 13.4 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியின் இருப்புக்கள், கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி இந்த பெறுமதியில் மிகவும் குறைந்த பெறுமதியில் அளவிட வேண்டியிருந்த போதிலும் ரூபா 50,428,449 ஆன இறுதி இருப்பு மீதி பாதீடு செய்யப்பட்ட அலகு கிரயத்தில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | அல்லது தேறிய தேறக் கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதியைக் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் 17.15 C பந்தியின் பிரகாரம் மீள் மதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் கணிப்பீடு செய்யும் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் அந்த சொத்துக்களில் காணப்பட வேண்டியிருந்த நியாயமான பெறுமதியைக் கணிப்பிட்டு நியாயமான பெறுமதியை விஞ்சுகின்ற பெறுமதி மீள் மதிப்பீட்டு இலாபமாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் 2020 ஆம் ஆண்டின் போது அரசாங்கத்தின் மானியம் ஒன்றாக கம்பனிக்கு கையளிக்கப்பட்ட கணக்கீடு செய்யப்படாத பெறுமதி ரூபா 6,828,395 ஆன சொத்துக்கள் மூலதன மானியம் ஆக இனங்காணப்படாமல் 2023 ஆகஸ்ட் 24 ஆந் திகதி ரூபா 4,909,500 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த மீள் மதிப்பீட்டுப் பெறுமதி மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் மற்றும் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த சீராக்கங்கள் 2024/25 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்யப்படும். | சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் இனங்கண்டு நியமத்தின் பிரகாரம் மீள் மதிப்பீட்டு இலாபம் இனங்காணப்படல் வேண்டும். |
| (இ) | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமத்தின் 28.24 ஆம் பந்தியின் பிரகாரம் குறித்துரைத்த நலன்கள் திட்டத்தில் கிரயம் இனங்காணும் போது காலப் பகுதிக்கான ஆயுட்கால இலாபம் / நட்டம் வருமானக் கூற்றில் | எதிர்வரும் நிதி ஆண்டின் போது இந்த வழுக்கள் சரி செய்யப்படும். | நியமத்தின் பிரகாரம் ஆயுட்கால இலாபம் / நட்டம் சரியாக இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் ரூபா 411,199 ஆன ஆயுட்கால நட்டம் வருமானக் கூற்றில் செலவினமாகவும், ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் இலாபமாகவும் இனங்காணப்பட்டமையால் மீளாய்வாண்டின் மொத்த விரிவான வருமானம் ரூபா 411,199 இனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 19,302,311 ஆன மீளாய்வாண்டின் ஆரம்ப இருப்பு ரூபா 16,939,123 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் இலாபம் ரூபா 2,363,188 இனால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | இந்த வழுக்கள் 2024/25 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படும். | ஆரம்ப இருப்பின் பெறுமதி சரியாகக் கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 56,736,709 ஆக இருந்த போதிலும் அது ரூபா 58,216,559 ஆக ரூபா 1,479,850 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டமையால் ஆண்டின் இலாபம் அப் பெறுமானத்தால் மிகைக் கணிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | மிகைக் கணிப்பீட்டு பெறுமதி 2024/25 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படும். | ஆண்டிற்குரிய வட்டி வருமானம் சரியாகக் கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கிரயத்திற்கான 15 சதவீதமான பெறுமானத் தேய்வு விகிதம் 15.4 சதவீதமாகக் கொண்டு பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டதன் காரணமாக பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 385,370 இனால் அதிகரித்தும் சொத்துக்கள் அப் பெறுமதியால் குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024/25 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படும். | நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வு சரியாகக் கணிப்பிட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி<br><br>ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி<br><br>ரூபா | வேறுபாடு<br><br>ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| வருமான ஒதுக்கம், வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் கூட்டுப் பெறுமதி | 561,805,418 | 562,363,442 | 558,024 | 2024/25 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சரி செய்யப்படும். | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட மீதி, நேரொத்த அறிக்கைகளின் மீதிகளுடன் சீராக்கப்படல் வேண்டும். |

### 1.5.4 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி 2022/2023 ஆம் ஆண்டிற்காக நிரந்தரமற்ற 191 ஊழியர்களுக்கு ரூபா 1,499,719 மிகை ஊதியப் படி ஒன்று மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய திறைசேரி அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆண்டின் இறுதியில் மிகை ஊதியப்படி செலுத்தும் போது நிரந்தரமற்ற ஊழியர்களுக்கும் பணிப்பாளர் சபை ஊழியர்களுக்கும் படி செலுத்தப்பட்டுள்ளது. தேசிய உப்பு உற்பத்திக் கம்பனியாக இருந்ததுடன் கம்பனி உற்பத்தி மற்றும் இலாபம் நிரந்தர, ஒப்பந்த மற்றும் அமைய மற்றும் பருவகால பதவியணியினரால் உழைக்கப்பட்டுள்ளது. மிகை ஊதியப் படி ஆரம்பத்தில் இருந்து (2021) நிரந்தர, ஒப்பந்த மற்றும் பருவகால முரண்பாடுகள் இன்றி தொழிலாளர்கள் மற்றும் பதவியணியினருக்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் செலுத்தப்பட்டுள்ளது. | திறைசேரி அங்கீகாரத்தின் அடிப்படையில் நிரந்தரமற்ற ஊழியர்களுக்கு மிகையூதியப்படி செலுத்துதல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்து சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| செலவினம் | ரூபா 1,800,000 | கம்பனியின் பிரதான அலுவலகத்தை நடாத்திச் செல்லுகின்ற கட்டத்திற்காக செலுத்த வேண்டிய வாடகையாக | கம்பயின் பிரதான அலுவலகம் நாரஹேன்பிட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் | செலுத்த வேண்டிய வாடகை ஏற்பாட்டிற்காக அடிப்படையான |

| | | | |
|---|---|---|---|
| கணக்குகளில் காண்பிக்கப்பட்ட பெறுமதியை உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் | கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனினும் எமது நிறுவனம் 2023/24 ஆம் ஆண்டின் போது நிதி அமைச்சின் கீழ் மீண்டும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த நிதயேற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது. | சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பந்தி | மீளாய்வாண்டிற்குரிய நிதிக் கூற்றுக்கள் 2024 செப்தெம்பர் 27 ஆந் திகதி அதாவது 04 மாத தாமதத்தின் பின்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் இந்த அறிக்கைத் திகதி வரையிலும் வருடாந்த அறிக்கையின் வரைவு ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது உப்பளங்களின் தரவுகளை பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதுடன் அதனால் குறித்துரைத்த திகதியில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்க முடியாதிருந்தது. ஏதிர் வரும் ஆண்டின் போது நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்துரைத்த திகதியில் நிதிக் கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கையின் வரைவு கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 சனவரி 27 ஆம் திகதிய PED 01/2020 ஆம் இலக்க நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | செயற்பாட்டு பணிப்பாளர் புதிய ஆட்சேர்த்தலாக நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 ஏப்ரல் 11 ஆந் திகதி முதல் கம்பனியின் நிறைவேற்று | 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 104 பிரிவின் பிரகாரம் உப்புக் கம்பனியின் முன்னேற்றத்திற்காக சேவைத் தேவையின் அடிப்படையில் | செயற்பாட்டு பணிப்பாளர் சேர்த்தல் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பணிப்பாளர் ஒருவர் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டில் ரூபா 1,597,896 சம்பளம் மற்றும் படிகளாக திறைசேரி அங்கீகாரம் இன்றி செலுத்தப்பட்டிருந்தது. | திறைசேரியின் மூலம் முறையாக நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர்களுக்கு இடையே ஒருவர் நிறைவேற்றுப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இந்தப் பதவி உப்புக் கம்பனிக்கு தொடரந்தும் தேவையாக இருந்தது என்பது பணிப்பாளர் சபையின் அபிப்பிராயம் ஆகும். | |
| (இ) | 2022 திசெம்பர் 21 ஆம் திகதிய PED 08/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை | ஊழியர்களுக்கு சேமிக்கப்பட்ட விடுமுறையின் அடிப்படையில் படிகள் செலுத்தும் போது பொது முயற்சிகளின் ஊழியர்களுக்கு உரித்தான விடுமுறை 1954 இன் 19 ஆம் இலக்க கடைகள் மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கி இருக்க வேண்டி இருந்ததுடன் அது பொது முயற்சிகளின் மூலதனம் மற்றும் / அல்லது மீண்டெழும் செலவினத்திற்காக பொது திறைசேரியில் இருந்து நிதி பெற்றுக் கொள்ளாதிருத்தல் வேண்டும். எனினும் அந்த நிபந்தனைகளுக்கு முரணாக வருடாந்தம் ஊழியர்களுக்கு 42 விடுமுறைகள் வழங்கப்பட்டிருக்கும் போது மற்றும் கம்பனிக்கு ரூபா 100 மில்லியன் மூலதன மாணியம் | 2022/23 ஆம் ஆண்டின் போது கம்பனியின் இலாபத்தில் ரூபா 20 மில்லியன் மற்றும் 2023/24 ஆம் ஆண்டின் போது ரூபா 100 மில்லியன் திறைசேரிக்கு செலுத்தப்பட்டுள்ளது. ரூபா 58 மில்லியன் தொகை 2022/23 ஆம் ஆண்டிற்காக கம்பனி வருமான வரியாக செலுத்தி இருந்ததுடன் 2023/24 ஆம் ஆண்டிற்காக ரூபா 89 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் அடிப்படையில் ஊழியர்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது. அது அநேகமான காலத்திற்கு முன்னிருந்து தொடர்ச்சியாக செலுத்தப்பட்டிருந்தது. | விடுமுறையின் அடிப்படையில் ஊக்குவிப்புப்படி செலுத்துதல் சுற்றறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டின் போது திறைசேரியில் இருந்து பெறப்பட்டிருக்கும் போது சேமிக்கப்பட்ட விடுமுறையின் அடிப்படையிலான படிக்காக 59 நிரந்தர உத்தியோகத்தர்களுக்காகக ரூபா 764,073 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 2024 பெப்ரவரி 28 ஆம் திகதிய இலக்கம் PED 01/2024 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி மற்றும் 2022 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய இலக்கம் PED 04/2022 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.5 ஆம் பந்தி | திறைசேரி அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபை அங்கீகாரத்தில் 402 உத்தியோகத்தர்களுக்காக ரூபா 28,510,500 வருகைப் படியும் மற்றும் தலைவரின் தங்குமிட வசதிகளுக்காக ரூபா 339,643 செலவினமும் மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்ததது. | முகாமைத்துவத்தால் இதற்கான கொள்கை ஒன்று தயாரித்து 2023 பெப்ரவரி 03 ஆந் திகதி பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைக்கும் வரை வருகைப் படி செலுத்துவதற்காக 2023 பெப்ரவரி மாதம் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.<br><br>பணிப்பாளர் சபையால் தலைவரின் தங்குமிட வசதிகளுக்காக மாதம் ஒன்றுக்கு ரூபா 65,000 உச்ச எல்லையின் கீழ் செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றிறக்கையின் பிரகாரம் திறைசேரி அங்கீகாரத்தின் அடிப்படையில் படிகள் செலுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 198,829,496 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 134,806,255 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 63,423,241 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது விற்பனைக் கிரயம் ரூபா 49,771,074 இனாலும், விற்பனை மற்றும் நிர்வாக செலவினம் ரூபா 29,537,307 இனாலும் மற்றும் வருமான வரி ரூபா 31,187,712 இனாலும் அதிகரித்திருந்த போதிலும் உப்பு விற்பனை வருமானம் ரூபா 159,432,969 இனால் அதிகரித்தமை மற்றும் தேறிய நிதி வருமானம் ரூபா 14,330,563 இனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய யுத்த நிலைமைகளின் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பளை பிரதேச செயலகத்திற்கு உரிய குறிஞ்சத்தீவு (ஆணையிரவு – வடக்கு) உப்பளங்களில் உற்பத்தி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதுடன் அந்த செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக 2017 திசெம்பர் 12 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2022 யூலை 21 ஆந் திகதி அரசாங்கத்தின் மதிப்பீட்டுத் திணைக்களத்தால் இந்தக் காணி ரூபா 205,000,000 தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டு நீண்ட கால வாடகை உடன்படிக்கையின் மூலம் கம்பனிக்கு கையேற்பதற்காக வட மாகாண ஆளுநரிடம் கோரிக்கை இடப்பட்டிருந்த போதிலும் மீளாவாண்டின் இறுதி வரையிலும் கையேற்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக உள்நாட்டு உற்பத்தியை உயர்த்துவதன் மூலம் நாட்டின் தேவைகளுக்காக உற்பத்தி இறக்குமதி செய்வதை குறைப்பதற்காக பொருத்தமான பரப்பளவில் இந்த உப்பளங்கள் காணப்பட்ட போதும் அது தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டது. | நீதிமன்றத்தின் சட்ட ரீதியான நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் உற்பத்தி நடவடிக்கைகள் விரைவாக ஆரம்பிக்கப்படும். | சட்ட ரீதியான நடவடிக்கைகளை விரைவாக பூர்த்தி செய்து உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2023/2024 ஆம் ஆண்டில் கம்பனியின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் 08 பிரதான நோக்கங்களுக்கு உரிய 30 உப – செயற்பாடுகளை உள்ளடக்கியிருந்ததுடன் அதில் 07 செயற்பாடுகளில் செயல் முன்னேற்றம் 0 வீதம் ஆக இருந்ததுடன் 05 செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் 20 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் | அநேகமான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் முன்னுரிமை வழங்குதல் மற்றும் காணப்படுகின்ற வரவு செலவுத் திட்ட அடிப்படையில் சில செயற்பாடுகள் வருட மத்தியில் குறைக்கப்பட்டிருந்தது. | நடைமுறைரீதியான நிலைமையினைக் கவனத்தில் கொண்டு திட்டங்கள் தயாரிக்க வேண்டியிருந்ததுடன் திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இடையிலான வீச்சில் காணப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2024 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்வினால் ஆணையிறவு உப்பளத்தில் மேற்கொள்ளப்பட்ட இருப்பு பௌதீக பரிசோதனையின் பிரகாரம் மீதி மற்றும் அத்திகதியில் உற்பத்தி பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளுக்கு இடையே ரூபா 13,548,600 பெறுமதியுடைய மெற்றிக்தொன் 408.4 (அண்ணளவாக) இருப்புப் பற்றாக்குறை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பான விசாரணைகளை நடாத்தி உரிய ஊழியர்களுக்கு தண்டணை வழங்கப்பட்டுள்ளதுடன் பற்றாக்குறையை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காணப்படுகின்ற பௌதீக இருப்புக்கள் மற்றும் அத்திகதியில் இருப்புப் பதிவேட்டின் மீதிகளை இணக்கம் செய்த போது வேறுபாடுகள் ஏற்படுமாயின் அவற்றுக்குரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |